Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 252 | உள்ளூர் - 09.09.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 252 | வெளியூர் - 10.09.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

மனதில் காதல்... வெளியில் அமைதி! இந்த 5 ராசிகளின் ரகசியம்!!
புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!
இந்து சமயத்திற்கு தனித்துறை!
வங்கி ஊழியர்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தம்!

## மோடி-புதின் சந்திப்பு! செப்.11-ல் டெல்லியில்!



புதுடெல்லி, செப். 09–

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் வரும் செப்.11–ம் தேதி டெல்லியில் நேருக்கு நேர் சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்த உள்ளனர். பாதுகாப்பு, வர்த்தகம், எரிசக்தி, அணுசக்தி உள்ளிட்ட விவகாரங்களுடன், இந்தியாவுக்கான ரஷ்யாவின் அதிநவீன Su–57 போர் விமானங்கள் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் குறித்தும் முக்கிய பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

உக்ரைன் போர், ரஷ்ய கச்சா எண்ணெய், ரூபாய் பரிவர்த்தனை, அணுமின் நிலையங்கள் மற்றும் இருநாட்டு பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவையும் சந்திப்பில் முக்கிய இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. செப்.12, 13–ல் நடைபெறும் BRICS உச்சி மாநாட்டுக்கு முன்பாக இந்த சந்திப்பு நடைபெறுவது சர்வதேச அளவில் கூடுதல் கவனம் பெற்றுள்ளது.

## நேபாளத்தில் மீண்டும் நிலநடுக்கம்!



நேபாளம், செப். 09–

நேபாளத்தில் ஏற்கனவே திடீர் வெள்ளப்பெருக்கால் 1,300–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். தலைநகர் காத்மாண்டுவில் இருந்து வடமேற்கே சுமார் 375 கி.மீ. தொலைவில் உள்ள லோமன்தாங் பகுதியை மையமாகக் கொண்டு, இந்திய நேரப்படி இரவு 9.38 மணியளவில் நிலநடுக்கம் பதிவானது. இது ரிக்டர் அளவில் 5.3 ஆகவும், பூமிக்கு அடியில் 143 கி.மீ. ஆழத்திலும் ஏற்பட்டதாக நேபாள தேசிய நிலநடுக்க கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து வரும் நிலையில், இந்த அதிர்வு கூடுதல் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ஈரானின் பதிலடி தாக்குதல்!



புதுடெல்லி, செப். 09–

கர்க் தீவு, ஜாஸ்க் அருகே அமெரிக்கா ஈரான் எண்ணெய் கப்பல்களை தாக்கியதைத் தொடர்ந்து, ஜோர்டானில் உள்ள அமெரிக்க ராணுவ தளம் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜோர்டான் 20 ஏவுகணைகளில் 18–ஐ இடைமறித்ததாக தெரிவித்துள்ளது.

## ஹார்முஸில் போர் பதற்றம் உச்சம்!

# ஈரானுக்கு அமெரிக்கா மரண அடி! 5 எண்ணெய் கப்பல்கள் தகர்ப்பு!

## ஹார்முஸ் ஜலசந்தி கொந்தளிப்பு!!




வாஷிங்டன், செப். 09–

கார்க் தீவு அருகே 5 ஈரான் எண்ணெய் கப்பல்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது; இதனால் மேற்காசியாவில் பதற்றம் தொடர்ந்து வருகிறது.

அமெரிக்கா தாக்குதலால் சேதமடைந்த ராணுவ கட்டமைப்பை மீட்டெடுக்க ஈரான் முயன்று வருவதுடன், தன் ஆதரவு அமைப்புகளுடன் சேர்ந்து கூட்டு பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேற்காசியாவில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்க ராணுவம் அதிரடித் தாக்குதலை நடத்தி வருகிறது. தற்போது மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க படைகள் ஈரான் கச்சா எண்ணெய் ஏற்றிச் சென்ற கப்பல்கள் அழிக்கப்படும் செயற்கைக்கோள் வீடியோவை வெளியிட்டுள்ளது.

கார்க் தீவு அருகே 5 ஈரான் எண்ணெய் கப்பல்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது. இது குறித்து அமெரிக்கப்படை மத்திய தலைமையகம் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

கடந்த இரண்டு நாட்களில், ஈரான் படை அமெரிக்கக் கடற்படைக் கப்பல் ஒன்றை இருமுறை பாலிஸ்டிக் ஏவுகணைகள் மூலம் குறிவைத்து தாக்குதல் நடத்த முயன்றது. இதனால் ஈரானின் 5 கச்சா எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்களை அமெரிக்கப் படைகள் அழித்தன.

ஈரானின் தாக்குதல் முயற்சிகளிலிருந்து அமெரிக்கக் கப்பல் வெற்றிகரமாகத் தப்பித்து. அப்பகுதியில் தொடர்ந்து ரோந்துப் பணியை மேற்கொண்டது. இதில் அமெரிக்கப் படையினர் யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை’ என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையே அமெரிக்கத் தாக்குதல்களை தொடர்ந்து, ஜோர்டானில் உள்ள அமெரிக்க இலக்குகளை நோக்கி ஈரான் ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தி இருக்கிறது. இதனால் மேற்காசியாவில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

## கடந்த 10 ஆண்டுகளில் இந்திய பொருளாதாரம் இருமடங்கு உயர்வு; ராஜ்நாத் சிங்!



கொழும்பு, செப். 09–

கடந்த 10 ஆண்டுகளில் இந்திய பொருளாதாரம் இருமடங்கு அதிகரித்துள்ளதாக இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். 3 நாள் பயணமாக சென்றுள்ள அவர் நேற்று கொழும்புவில் நடந்த நிகழ்ச்சியில் பேசியதாவது; இந்திய பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, அது சீராக வலுவடைந்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தியாவின் பொருளாதாரம் கடந்த 10 முதல் 12 ஆண்டுகளில் இரு மடங்காக உயர்ந்துள்ளது. தற்போதைய ஜிடிபி வளர்ச்சி விகிதம் சுமார் 7.8 சதவீதமாக உள்ளது. இந்தியா உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாகவும், உலகளாவிய வளர்ச்சியில் 16 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை வழங்கும் முக்கிய நாடாகவும் திகழ்கிறது.

பிரதமர் மோடியின் தலைமையிலான ஆட்சியில் கடந்த 12 ஆண்டுகளில் சராசரி பணவீக்கம் 4.7 சதவீதமாகக் கட்டுப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது. முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் பணவீக்கம் 10 முதல் 11 சதவீதம் வரை இருந்தது, இவ்வாறு கூறினார்.

## ‘தாய் மாமன்’ தங்க மோதிரம் திட்டம் தேதி மாற்றம்!




சென்னை, செப். 09–

அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் ‘தாய் மாமன் தங்க மோதிரம்’ திட்டம் முதலில் செப்.15–ல் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது தொடக்க விழா செப்.25–ம் தேதிக்கு மாற்றப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் முதல்வர் விஜய் திட்டத்தை தொடங்கி வைக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஜூன் 22 முதல் பிறந்த குழந்தைகளுக்காக 6,500 தங்க மோதிரங்கள் தயார் நிலையில் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உசிலம்பட்டியில் மட்டும் சுமார் 1,500 பேருக்கு மோதிரம் வழங்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

ஆண்டுக்கு ரூ.755.83 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் இந்தத் திட்டம், அரசு மருத்துவமனைகளில் பிரசவத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், ‘தாய்மாமன் சீர்’ பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையிலும் செயல்படுத்தப்படுகிறது.

## தமிழ்நாட்டில் ரூ. 10,000 கோடி ஸ்மார்ட் சிட்டி திட்டங்களில் விதிமீறல்கள்! சிஏஜி அறிக்கை!



தமிழ்நாட்டில் மத்திய அரசின் ரூ. 10,000 கோடி நிதியில் மேற்கொள்ளப்பட்ட 11 ஸ்மார்ட் சிட்டி (சீர்மிகு நகரங்கள்) திட்டங்கள் குறித்து மத்திய தணிக்கை குழு ஆய்வு செய்து அறிக்கையை வெளியிட்டுள்ளது.

2015 முதல் 2023 ஆம் காலகட்டத்தில், சென்னை உள்பட தமிழ்நாட்டில் 11 ஸ்மார்ட் சிட்டி நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் குறித்து நடத்தப்பட்ட தணிக்கையில், அவசர சூழல்களில் மட்டுமே திட்டங்களை நீக்க வேண்டும் என்ற ’மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின்’ வழிகாட்டு நெறிமுறைகளை மீறி, ரூ. 1,602.20 கோடி மதிப்பிலான 52 திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என்றும், ரூ. 623.86 கோடி மதிப்பிலான 44 திட்டங்கள் புதிதாக மேற்கொள்ளப்பட்டன என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிகள் நிதியின் கீழ் செயல்படுத்தியிருக்க வேண்டிய ரூ. 21.42 கோடி மதிப்பிலான 5 திட்டங்களை ஸ்மார்ட் சிட்டி நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக திருநெல்வேலியில் ரூ. 314.62 கோடி மதிப்பிலான 15 திட்டமிடாத திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது அப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் 25.84 சதவிகிதமாகும். இதேபோல், சென்னை மாநகராட்சி வளாகத்தில் அமைக்கப்பட்ட பசுமை கட்டடம், கோயம்புத்தூர் நேரு விளையாட்டு அரங்கில் அமைக்கப்பட்ட ‘ஃப்ளட்லைட்’ (floodlighting) வசதி, திருநெல்வேலியில் உள்ள விருந்தினர் இல்லம் மற்றும் மதுரையில் உள்ள கருத்தரங்கு மையம் ஆகிய திட்டங்கள் ஸ்மார்ட் சிட்டி நிதியின் கீழ் அனுமதி பெறாத திட்டங்களாகும்.

சென்னையில் மாநில அரசின் விளம்பரங்களுக்காக ரூ. 66.58 லட்சமும், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் இல்லாத பணிகளுக்கான ஆலோசகர்களுக்கு ரூ. 18.44 லட்சம் சம்பளமும், மக்களை மறுகுடியமர்த்தும் பணிகளுக்கு ரூ. 15.33 கோடியும் செலவிடப்பட்டன.

திருப்பூர் மாநகராட்சியில் கருத்தரங்க அறையைப் புதுப்பிக்கவும், 110 அங்குல எல்இடி (LED) தொலைக்காட்சி, கணினிகள், அச்சுப்பொறிகள் மற்றும் தளபாடங்களை வாங்கவும் ஸ்மார்ட் சிட்டி நிதி செலவிடப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சியில் நிலத்தடி கழிவுநீர் அகற்றும் பிரிவு ஊழியர்களின் ஊதியத்தை வழங்க நிர்வாக மற்றும் அலுவலகச் செலவுகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2.59 கோடி, சேலம் மாநகராட்சியும் அதே தலைப்பின் கீழ் ரூ. 2.95 கோடி, மதுரை மாநகராட்சியில் ஒப்பந்ததாரர்களுக்குக் கட்டணம் செலுத்த ரூ. 48.36 லட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் சிட்டி நிதியை விதிகளை மீறி, 2021 ஆம் ஆண்டு ஜூலை – அக்டோபர் இடைப்பட்ட காலத்தில் எட்டு முறை ரூ. 1,127 கோடியை மாநிலத் துறைகளின் தனிப்பட்ட வைப்பு கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

சென்னையைத் தவிர, மற்ற நகரங்களில் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களுக்கான முழுநேர தலைமைச் செயல் அதிகாரிகள் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த இடங்களில் மாநகராட்சி ஆணையர்களே கூடுதல் பொறுப்புகளை வகித்தது தெரியவந்துள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் நிதியை விதிகளை மீறி, அரசு அலுவலகங்களில் தொலைக்காட்சி, அதிகாரிகளுக்கு சொகுசு கார் போன்றவற்றை வாங்கவும் பயன்படுத்தப்பட்டிருப்பதாக தலைமை கணக்கு தணிக்கையாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்து சமயத்திற்கு தனித்துறை!



சென்னை, செப். 09–

தமிழக தலைமை செயலகத்தில், ‘ஹிந்து சமய அறநிலையத் துறை’ எனும் புதிய தனித்துறை உருவாக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, தமிழக அரசு தலைமை செயலர் சாய்குமார் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழக அரசின் நிர்வாக வசதிக்காகவும், பணிகளை மேலும் விரைவுபடுத்தவும் தலைமை செயலகத்தில் ‘ஹிந்து சமய அறநிலையத் துறை’ என்ற பெயரில் புதிய தனித் துறை ஒன்றை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, இதுவரை இயங்கி வந்த அறநிலையத்துறை ஆணையரகம், இனி முழுமையாக இந்த புதிய துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படுகிறது.

புதிய துறை உருவாக்கத்தை தொடர்ந்து, தமிழக அரசு நிர்வாக விதிகள், தலைமை செயலக நடைமுறை விதிகளில் தேவையான திருத்தங்களை, மனித வள மேலாண்மைத் துறை தனியாக வெளியிடும்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலராக உள்ள ராஜாராமன், மறு உத்தரவு வரும் வரை, இந்த புதிய ஹிந்து சமய அறநிலையத் துறையின் செயலராக கூடுதல் பொறுப்பை கவனிப்பார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 09.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 23-ம் தேதி

# தங்கத்தை போல செம்பு விலை வரலாறு காணாத உச்சம்!.



செம்பு விலை தொடர்ந்து இரண்டாவது நாளாக புதிய உச்சத்தைத் தொட்டு வரலாறு படைத்துள்ளது. உலக அளவில் நிலவும் கடுமையான தட்டுப்பாடு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட செம்பு இறக்குமதி மீது அமெரிக்கா புதிய வரி விதிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்புகளே இந்த விலை உயர்வுக்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளன.

லண்டன் உலோகம் மற்றும் பங்குச் சந்தையில் இந்தத் தொழிற்துறை உலோகம் தொடர்ச்சியாக நான்காவது நாளாக உயர்ந்து, புதிய சாதனையாக ஒரு டன் 14,617 டாலரை எட்டியுள்ளது. நடப்பாண்டில் மட்டும் செம்பு விலை சுமார் 17 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் செம்பின் அளவு குறைவாக இருப்பதற்கும், மறுபுறம் தரவு மையங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சாதனங்கள் மற்றும் மின்கட்டமைப்புகளிலிருந்து செம்புக்கான தேவை பெருமளவில் அதிகரித்து வருவதற்குமான நீண்டகால இடைவெளியே விலை உயர்வுக்கு அடிப்படையாக உள்ளது.

அமெரிக்காவின் சாத்தியமான வரி விதிப்பு நடவடிக்கைகளால் அதிக லாபம் ஈர்க்க, சுத்திகரிக்கப்பட்ட செம்பு அமெரிக்காவை நோக்கி நகர்த்தப்படுவதால், குறுகிய காலத் தட்டுப்பாடு மேலும் தீவிரமடைந்துள்ளதாக வல்லுநர்கள் கணிக்கின்றனர். இதனால் லண்டன் உலோகம் மற்றும் பங்குச் சந்தைக் கிடங்குகளில் இருப்புகள் பெருமளவில் காலியாகியுள்ளன.

இந்தச் சூழல் கடந்த மாதம் கடுமையான பற்றாக்குறையை ஏற்படுத்தியதோடு, சந்தையில் செம்பு விநியோகம் மிகக் குறைவாக இருப்பதை உணர்த்தும் வகையில் எதிர்கால விலை வளைவுகளும் கடுமையாக மாறியுள்ளன.

மறுபுறம், சீனாவிலும் உற்பத்தித் துறைக்கான வழக்கமான உச்சக்காலம் தொடங்கியுள்ளதால், அங்கு செம்புக்கான தேவை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வாரம் ஷாங்காய் ஃபியூச்சர்ஸ் எக்ஸ்சேஞ்ச் கிடங்குகளில் செப்பு இருப்பு 2024–ஆம் ஆண்டிற்குப் பின் மிகக் குறைந்த அளவுக்குச் சரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# உலக அளவில் ஆண்டு சம்பளம் அதிகம் வாங்கும் டாப் 5 தலைவர்கள்!




சிங்கப்பூர், செப். 09–

சிங்கப்பூர் அமைச்சர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட உள்ளதையடுத்து அந்நாட்டு பிரதமரின் ஆண்டு வருமானம் 64 சதவீதம் உயர்ந்து 27 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

அரசு மற்றும் தனியார் துறைகளில் இருந்து சிறந்த திறமையாளர்களை அரசியலுக்கு ஈர்ப்பதற்காகவும், ஊழலற்ற ஆட்சியை தொடர்வதற்கும் தென் கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூரில், அமைச்சர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படுகிறது. இதனால், உலகின் மிக அதிக சம்பளம் வாங்கும் அமைச்சர்களைக் கொண்ட நாடாக சிங்கப்பூர் விளங்கி வருகிறது.

சிங்கப்பூரில் கடைசியாக, 2012–ல் அமைச்சர்களின் சம்பளம் மாற்றிய மைக்கப்பட்டது. அப்போது மக்களின் எதிர்ப்பு காரணமாக, 36 சதவீதம் குறைக்கப்பட்டது. அதன்பின்னர் 2017, 2023–ல் சில காரணங்களால் சம்பளம் உயர்த்தப்படவில்லை. அதன் பிறகு தற்போது தான் அமைச்சர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட உள்ளது. இந்த உயர்வு வரும் அக்டோபர் 15–ந் தேதி முதல் அமலாக உள்ளது.

சிங்கப்பூரின் புதிய ஊதியக் கட்டமைப்பின்படி, பிரதமர் லாரன்ஸ் வோங்கின் ஆண்டு வருமானம் 2.2 மில்லியன் சிங்கப்பூர் டாலரிலிருந்து 3.6 மில்லியன் சிங்கப்பூர் டாலராக உயர்த்தப்பட உள்ளது. அதாவது இந்திய மதிப்பில் 26 கோடியே 9 லட்சம் ரூபாய் ஆகும். இதன்மூலம், உலகிலேயே அதிக சம்பளம் பெறும் அரசுத் தலைவர் என்ற இடத்தை லாரன்ஸ் வோங் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்கிறார்

அடுத்த ஐந்து ஆண்டுகளில் தனக்கு கிடைக்கும் ஊதிய உயர்வை அறப்பணிகளுக்கு நன்கொடையாக வழங்கப் போவதாக வோங் அறிவித்தார். இந்த ஊதிய உயர்வைத் தொடர்ந்து உலகிலேயே ஆண்டு வருமானம் பெரும் பிரதமர்களின் வரிசையில் முதல் இடத்தில் சிங்கப்பூர் பிரதமரான லாரன்ஸ் வோங் உள்ளார். அதற்கு அடுத்தப்படியாக ஹாங்காங் தலைமை நிர்வாகி ஜான் லீ ரூ.6.79 கோடியும், சுவிட்சர்லாந்து அதிபர் கை பெர்மெலின் ரூ.5.73 கோடியும், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ரூ.3.78 கோடியும், பிரான்ஸ் பிரதமர் ஆன்டி பர்ஹாம் ரூ.2.18 கோடியும், இந்தியா பிரதமர் நரேந்திர மோடி ரூ.33.60 லட்சமும் வாங்குகின்றனர்.

# 2 தொகுதி மாவட்ட செயலாளர்களுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை..!



சென்னை, செப். 09–

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிக்கு அடுத்த மாதம் 6–ந்தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த தொகுதிகளில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் கடந்த மே மாதம் 25–ந்தேதி தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்துவிட்டார். இதே போல் தாராபுரம் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வாக இருந்த சத்தியபாமாவும் தனது எம்.எல்.ஏ.பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தார்.

அ.தி.மு.க. வெற்றி பெற்ற இந்த இரு தொகுதிகளிலும் தி.மு.க. கணிசமான வாக்குகளை பெற்றிருந்தது. அதனால் இந்த இடைத்தேர்தலில் தி.மு.க. போட்டியிடுவது பற்றி முடிவு எடுக்கப்படுகிறது.

இதற்காக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா. மோ. அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் சுந்தர், அதே போல் திருப்பூர் மாவட்டக் கழக செயலாளர் இள பத்மநாபன், முன்னாள் அமைச்சர் வெள்ளக்கோவில் சாமிநாதன் மற்றும் தொகுதி பிரதிநிதிகளுடன் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் ஆலோசனை நடத்தினர். 2 தொகுதி இடைத்தேர்தலில் மும்முனை போட்டி நிலவும் என்பதால் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கும் என்பது பற்றி விரிவான ஆலோசனை நடத்தினார். இந்த தேர்தலில் த.வெ.க., அ.தி.மு.க.வை எதிர்த்து களம் காண வேண்டி இருப்பதால் தேர்தல் வியூகத்துக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றி மாவட்டச் செயலாளர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார். இடைத்தேர்தலில் வேட்பு மனு தாக்கல் தொடங்கி உள்ளதால் வேட்பாளராக யாரை நிறுத்தலாம் என்பது பற்றியும் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

# கர்நாடக பொதுப்பணித்துறை அமைச்சர், அவரது மகள் வீடுகளில் அமலாக்கத்துறை சோதனை!




பெங்களூரு, செப். 09–


கர்நாடக பொதுப்பணித்துறை அமைச்சர் சதீஷ் ஜார்கிஹோலி(64), அவரது மகளும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரியங்கா ஜார்கிஹோலி மற்றும் சிலரின் வீடுகள் உள்பட 18 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் புதன்கிழமை காலை முதல் சோதனை நடத்தி வருகின்றனர்.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ், டாலர்ஸ் காலனி பகுதியில் அமைந்துள்ள அமைச்சர் சதீஷ் ஜார்கிஹோலி வீடு உள்பட சுமார் 18 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவி த்தனர். இதில், அமை ச்சரின் மகளும் சிக்கோடி மக்களவைத் தொகுதி உறுப்பினரான பிரியங்கா ஜார்கிஹோலியின் வீடுகளிலும் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் விசாரணையின் ஒரு பகுதியாக இந்தச் சோதனை கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

கடந்த ஜூன் 24– இல் பெலகாவியில், சதீஷ் ஜார்கிஹோலியின் மைத்துனரும் கலால் துறை கூடுதல் ஆணையருமான ஒய். மஞ்சுநாத்தின் வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்திய சுமார் மூன்று மாதங்களுக்குப் பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்போது அவரது நெருங்கிய உதவியாளர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் அமலாக்க த்துறை சோதனை மேற்கொண்டன. அப்போதைய சோதனை கள், மதுபான உரிமம் தொடர்பான லஞ்சம் மற்றும் சந்தேகத்திற்குரிய பணமோசடி தொடர்பான குற்றச்சாட்டுகள் அடிப்படையில் நடைபெற்றன.

தற்போதைய சோதனைகள் வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாகப் பணம் பரிமாற்றம் தொடர்பானவை என்றும், பணப் பரிமாற்றத்தின் தடத்தைக் கண்டறியும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.


# தங்கம் விலை குறைவு!



சென்னை, செப். 09–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (செப். 9) கிராமுக்கு ரூ. 125 குறைந்து ஒரு கிராம் ரூ. 14,145–க்கும் சவரனுக்கு ரூ. 1,000 குறைந்து ஒரு சவரன் ரூ. 1,13,260–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி கிராம் ரூ. 255, கிலோ (கட்டி வெள்ளி) ரூ.2,55,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# நெருங்கும் தீபாவளி: விமான கட்டணம் இரு மடங்கானது!



புதுடில்லி, செப். 09–

நவராத்திரி மற்றும் தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில், அதை ஒட்டிய தினங்களில் முக்கிய உள்நாட்டு விமான வழித்தடங்களில் 7,000 ரூபாயாக இருந்த கட்டணம் 15,000 ரூபாயாக அதிகரித்துள்ளது.

அக்., 12 முதல் 18 வரை நவராத்திரி காலத்தில் மும்பை – கொல்கட்டா ஒரு வழி விமான கட்டணம், ஒருவருக்கு 16,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. வழக்கமாக இந்த வழித்தடத்தின் கட்டணம் 8,000 ரூபாய்க்குள் இருக்கும்.

டில்லி – மும்பை விமான கட்டணமும் உயர்ந்துள்ளது. வழக்கமாக 6,500 ரூபாயாக இருக்கும் இந்த வழித்தடத்தின் கட்டணம், பண்டிகை நாட்கள் வரும் அக்டோபர், நவம்பரில் 10,000 ரூபாயாக உள்ளது.

முக்கிய நகரங்களுக்கான நேரடி விமான டிக்கெட்டின் விலை 25,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

# ஆந்திர அரசாங்கத்தில் நடிகர் சிரஞ்சீவியின் மகளுக்கு கிடைத்த உயரிய பொறுப்பு!



ஆந்திரா, செப். 09–

விஜயவாடா இந்திரகீலாத்ரி மலையில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற ஸ்ரீ துர்கா மல்லேஸ்வர சுவாமி வர்லா தேவஸ்தானத்தின் அறங்கா வலர் குழுவில் சிறப்பு அழைப்பாளராக சுஷ்மிதா நியமிக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பாக ஆந்திர மாநில தேவாலய மற்றும் அறநிலையத்துறை முதன்மைச் செயலாளர் கே.கன்ன பாபு இதற்கான அதிகாரப்பூர்வ உத்தரவை பிறப்பித்துள்ளார். இந்த நியமனத்தின் மூலம் தேவஸ்தானத்தின் மேம்பா ட்டுப் பணிகளிலும், பக்தர்க ளுக்கு வழங்கப்படும் அடி ப்படை வசதிகளை மேம்ப டுத்துவதிலும் சுஷ்மிதா முக்கியப் பங்கு வகிப்பார். மேலும், கோயில் அறங்கா வலர் குழுவிற்கும் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கும் தனது அனுபவத்தின் அடிப்ப டையில் ஆலோசனைகளை வழங்கு வார். தொடர்ந்து, நவராத்திரி மற்றும் முக்கிய திருவிழாக்கள், ஜாத்திரை காலங்களில் கோயி லின் நிர்வாக நடவடிக்கைகளு க்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் வழங்கி உதவுவார்.

# விசா மோசடி புகார்: அமெரிக்காவில் காக்னிசன்ட்க்கு தற்காலிகத் தடை- ஐடி ஊழியர்கள் அதிர்ச்சி!

வாஷிங்டன், செப். 09–

அமெரிக்காவில் வெளிநாட்டு ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு அடிப்படையில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்காக கிரீன் கார்டு வழங்கப்படுகிறது. இதற்கான நடைமுறையில் பெர்ம் (நிரந்தரத் தொழிலாளர் சான்றளிப்பு நடைமுறை) என்பது முக்கியமான கட்டமாகும். இந்த பெர்ம் மூலமே, அமெரிக்க ஊழியர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், குறிப்பிட்ட பணியிடத்திற்கு தகுதியான பணியாளர்கள் கிடைக்கி றார்களா என்பது உள்ளிட்ட அம்சங்கள் ஆய்வு செய்யப்படும். இந்த நிலையில், அமெரிக்க ஊழியர்களைப் பாதி க்கும் வகையில் குறைந்த ஊதியப் பிரிவில் காக்னி சண்ட் விசா தாக்கல் செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்து ள்ளது. இதன் அடிப்படையில், காக்னிசன்ட் நிறுவனத்தின் பெர்ம் விண்ணப்பங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க தொழிலாளர் துறை தெரிவித்துள்ளது. மோசடி, நிதி முறைகேடுகள் உள்ளிட்டவை தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில், காக்னிசன்ட் நிறுவனம் மோசடி செய்ததாகவோ அல்லது அமெரிக்க குடியே ற்றச் சட்டங்களை மீறியதா கவோ இதுவரை அதிகாரப்பூ ர்வமாக எந்த முடிவும் அறிவிக்கப்படவில்லை. காக்னிசன்ட் நிறுவனத்திற்கு எதிரான இந்த நடவடிக்கை நீண்டகாலம் நீடித்தால், நிறுவனத்தில் பணியாற்றும் வெளிநாட்டு ஊழியர்களின் கிரீன் கார்டு நடைமுறைக ளுக்கு சிக்கல் ஏற்படும். இது அமெரிக்காவில் பணியாற்றும் இந்திய தகவல் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது.


## அருள்மிகு சர்வேஸ்வரர் திருக்கோயில், அண்ணாநகர், மதுரை-20

**பொது ஏலம்/டெண்டர் அறிவிப்பு**

பசலி 1436 மற்றும் 1437க்கான புஷ்பம் வைத்து விற்பனை செய்து கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் /டெண்டருக்கு டெபாசிட் தொகை 50,000/– விடலைத் தேங்காய் சேகரித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் / டெண்டருக்கு டெபாசிட் தொகை ரூ.5,000/– செலுத்தி 28.09.2026 திங்கள் கிழமை அன்று காலை 10.30 மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் கொடுத்து காலை 11.00 மணிக்கு நடைபெறும் பொது ஏலம்/ டெண்டரில் கலந்து கொள்ளலாம். மேலும் விபரங்கள் திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

இப்படிக்கு
**திரு.வீர.இராமசாமி,**
அறங்காவலர் குழுத் தலைவர்.

வெ.ஆ.எண்: 184/ செ.ம.தொ.அ./
மதுரை / நாள்: 08.09.2026



# மனதில் காதல்... வெளியில் அமைதி! இந்த 5 ராசிகளின் ரகசியம்!!



ஜோதிடக் கருத்துகளின்படி, ஒவ்வொரு ராசிக்காரர்களும் காதல் மற்றும் உறவுகளில் தனித்துவமான அணுகுமுறையை கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. சிலர் தங்கள் மனதில் தோன்றியதை உடனடியாக வெளிப்படுத்துவார்கள். ஆனால் சிலர் ஆழமாக உணர்ந்தாலும், அதை வெளிப்படையாக சொல்லாமல் மனதுக்குள்ளேயே வைத்துக்கொள்வார்கள். குறிப்பாக கடகம், துலாம், விருச்சிகம், தனுசு மற்றும் மீனம் ஆகிய 5 ராசிக்காரர்கள் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் அதிக தயக்கம் காட்டுவதாக இந்தக் கட்டுரை குறிப்பிடுகிறது.

**கடகம்: மனதை பாதுகாப்பாக வைத்திருப்பவர்கள்**

கடக ராசிக்காரர்கள் உணர்ச்சிப்பூர்வமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஒருவருடன் முழுமையான நம்பிக்கையும் பாதுகாப்பு உணர்வும் ஏற்பட்ட பிறகே தங்களின் ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள்.

காதல் ஏற்பட்டாலும் அவசரமாக உறவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல விரும்ப மாட்டார்கள். உறவில் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை இருப்பதை உறுதி செய்ய விரும்புவார்கள். தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவது சில நேரங்களில் தங்களை பலவீனமாக காட்டிவிடுமோ என்ற எண்ணமும் இருக்கலாம்.

**துலாம் : வார்த்தைகளை விட செயலுக்கு முக்கியத்துவம்**

துலாம் ராசிக்காரர்கள் உறவுகளில் அன்பையும் நெருக்கத்தையும் விரும்புவார்கள். அதே நேரத்தில் தங்களுக்கு உரிய மரியாதை மற்றும் நியாயமான அணுகுமுறை கிடைக்கிறதா என்பதையும் கவனிப்பார்கள்.

ஒருவரை பிடித்திருந்தாலும், உடனடியாக அதை வெளிப்படுத்தாமல் இருக்கலாம். உணர்ச்சிப்பூர்வமாக தங்களை முழுமையாக ஈடுபடுத்துவதற்கு முன்பு எதிரில் இருப்பவரின் செயல்பாடுகளை கவனிப்பார்கள். வெறும் அழகான வார்த்தைகளைவிட தொடர்ச்சியான முயற்சி மற்றும் மரியாதை அவர்களுக்கு முக்கியமானதாக இருக்கும்.

**விருச்சிகம்: மனதில் இருப்பதை ரகசியமாக வைத்திருப்பவர்கள்**

விருச்சிக ராசிக்காரர்களின் முக்கிய குணங்களில் ஒன்று ரகசியத்தை காப்பது என இந்தக் கட்டுரை குறிப்பிடுகிறது. ஒருவரிடம் உணர்வுப்பூர்வமாக ஈடுபட்டாலும், தங்களுடைய அனைத்து உணர்வுகளையும் உடனடியாக வெளிப்படுத்த மாட்டார்கள்.

மற்றவர்களின் செயல்பாடுகளையும் வார்த்தைகளையும் உன்னிப்பாக கவனிப்பார்கள். ஒருவர் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுகிறாரா என்பதையும் பார்த்த பிறகே முழுமையான நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

காதல் மட்டுமின்றி, வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளையும் தங்களுக்குள்ளேயே வைத்துக் கொள்ளும் பழக்கம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

**தனுசு: சுதந்திரத்தை இழக்க விரும்பாதவர்கள்**

தனுசு ராசிக்காரர்களின் எண்ணங்களும் செயல்பாடுகளும் வேகமானதாக இருக்கலாம். அவர்களுக்கு சுதந்திரம்மிகவும் முக்கியமானதாகக் கூறப்படுகிறது.

ஒருவரை விரும்பினாலும், அந்த உணர்வை வெளிப்படுத்துவதால் தங்களுடைய சுதந்திரத்தில் ஏதேனும் கட்டுப்பாடு ஏற்படுமோ என்று நினைக்கலாம். இதனால் மனதில் இருக்கும் விஷயங்களை வெளிப்படையாக கூறாமல் இருக்க வாய்ப்புள்ளதாக இந்தக் கட்டுரை குறிப்பிடுகிறது.

**மீனம் கற்பனை அதிகம், வெளிப்பாடு நிதானம்**

மீன ராசிக்காரர்கள் காதல் விஷயங்களில் அதிகம் உணர்ச்சிவசப்படுபவர்களாகக் கூறப்படுகிறார்கள். சிறிய விஷயங்களைக்கூட ஆழமாக எடுத்துக்கொண்டு, தங்கள் மனதில் பல்வேறு கற்பனைகளை உருவாக்கிக் கொள்வார்கள்.

ஒருவருடன் நெருக்கமாக பழகும்போது, அந்த உறவு உண்மையானதா, நம்பகமானதா என்பதை உறுதி செய்ய நேரம் எடுத்துக்கொள்வார்கள். தங்களுடைய உணர்வுகளை அவசரமாக வெளிப்படுத்தாமல், அதை முதிர்ச்சியாகவும் அழகாகவும் வெளிப்படுத்த விரும்புவார்கள்.

**மொத்தத்தில்...**

இந்த 5 ராசிக்காரர்களும் காதல் உணர்வுகள் இல்லாதவர்கள் என்று அர்த்தமல்ல. மாறாக, உணர்வுகளை வெளிப்படுத்தும் விதம் மற்றும் நேரம் வேறுபடலாம் என்பதே இந்த ஜோதிடக் கருத்தின் அடிப்படை.

ஒருவரின் உண்மையான குணத்தை ராசி மட்டும் தீர்மானிக்காது. தனிப்பட்ட அனுபவங்கள், சூழ்நிலைகள் மற்றும் மனிதர்களுக்கிடையிலான புரிதலும் உறவுகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**பொறுப்புத் துறப்பு:** இந்தத் தகவல்கள் பொதுவான ஜோதிடக் கருத்துகளின் அடிப்படையில் வழங்கப்பட்டவை. இதனை தொழில்முறை அல்லது நிபுணர் ஆலோசனையாகக் கருத வேண்டாம்.





நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த கல்லாங்குளம் அண்ணாமலையார் கோவிலில் இன்று ஆவணி மாத பிரதோஷத்தை ஒட்டி அண்ணாமலையார் மற்றும் நந்தி பகவானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.பூஜையில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து பிரதோசநாயகர் என்னும் சந்திர சேகரமூர்த்தி ரிசப வாகனத்தில் எழுந்தருளி கோவில் பிரகாரம் சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.




## உணவு மூலம் சர்க்கரையை கட்டுப்படுத்துவது எப்படி?



சரியான உணவுப் பழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவலாம்.

**சாப்பிட வேண்டிய உணவுகள்:**

**நார்ச்சத்து:** கம்பு, கேழ்வரகு, ஓட்ஸ், முழு தானியங்கள்.

**பச்சைக் காய்கறிகள்:** கீரை, ப்ரோக்கோலி, முட்டைக்கோஸ், வெண்டைக்காய்.

**புரதச்சத்து:** பயறு, கொண்டைக்கடலை, கொழுப்பு குறைந்த மீன்.

**மற்றவை:** வெந்தயம், பூண்டு, கொய்யாப்பழம் போன்றவற்றை அளவோடு உணவில் சேர்க்கலாம்.

**குறைக்க வேண்டிய உணவுகள்:**

மிட்டாய், குளிர்பானம் மற்றும் சர்க்கரை சேர்க்கப்பட்ட உணவுகள்.

மைதா மற்றும் அதிக மாவுச்சத்து கொண்ட பதப்படுத்தப்பட்ட உணவுகள்.

துரித உணவுகள் மற்றும் அதிக எண்ணெயில் பொரித்த தின்பண்டங்கள்.

**எளிய உணவுப் பழக்கங்கள்:**

போதுமான தண்ணீர் குடிக்கவும். சர்க்கரை சேர்க்கப்பட்ட பானங்களுக்கு பதிலாக தண்ணீரைத் தேர்வு செய்யுங்கள்.

ஒரே நேரத்தில் அதிகமாக சாப்பிடாமல், அளவான உணவைத் தேர்ந்தெடுத்து சீரான உணவுப் பழக்கத்தைப் பின்பற்றுவது முக்கியம்.

**குறிப்பு:** நீரிழிவு உள்ளவர்கள் தங்கள் உணவு முறையில் பெரிய மாற்றங்களைச் செய்வதற்கு முன் மருத்துவர் அல்லது உணவியல் நிபுணரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

## சினிமா துளிகள்..!

### ஹாலிவுட் முதல் கோலிவுட் வரை... பரபரக்கும் சினிமா உலகம்!



**ஹாலிவுட்டில் வசூல் வேட்டை!**

2026 கோடை கால அமெரிக்க பாக்ஸ் ஆபிஸ் புதிய சாதனை படைத்துள்ளது. $4.76 பில்லியன் வசூலுடன் 2013–ம் ஆண்டின் சாதனையை முறியடித்துள்ளது. Spider–Man: Brand New Day, The Odyssey, Toy Story 5 உள்ளிட்ட படங்கள் இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக உள்ளன.

**AI கதை... ஆண்ட்ரூ கார்ஃபீல்டின் புதிய அவதாரம்!**

OpenAI நிறுவனத்தின் சாம் ஆல்ட்மேன் கதையை மையமாகக் கொண்ட Artificial படத்தின் டிரெய்லர் வெளியாகி கவனம் பெற்றுள்ளது. ஆண்ட்ரூ கார்ஃபீல்ட் சாம் ஆல்ட்மேனாக நடித்துள்ளார்; படம் கிறிஸ்துமஸ் தின வெளியீடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**தீபிகாரன்வீர் குடும்பத்தில் புதிய கொண்டாட்டம்!**

இரண்டாவது குழந்தையை எதிர்பார்க்கும் தீபிகா படுகோனே, ரன்வீர் சிங்குடன் எடுத்த புதிய புகைப்படங்களை பகிர்ந்துள்ளார். மகள் துவாவும் இடம்பெற்றுள்ள இந்தப் புகைப்படங்கள் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

**‘துரந்தர்’ படத்திற்கு எதிராக சர்ச்சை கருத்து!**

ரன்வீர் சிங்கின் Dhurandhar படங்களுக்கு இயக்குநர் திக்மான்ஷு துலியா கடும் விமர்சனம் தெரிவித்துள்ளார். படத்தில் கதை இல்லை என அவர் கூறிய கருத்து பாலிவுட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**சைஃப் அலி கானுக்கு 30 ஆண்டுகள்!**

இந்தி திரையுலகில் மூன்று தசாப்தங்களை நிறைவு செய்துள்ள சைஃப் அலி கான், தனது சினிமா பயணம் மற்றும் வித்தியாசமான கதாபாத்திரங்களைத் தேர்வு செய்த அனுபவங்களை பகிர்ந்துள்ளார்.

**மணிரத்னம் படத்தில் விஜய் சேதுபதிசாய் பல்லவி!**

மணிரத்னத்தின் புதிய காதல் படமான ‘இஞ்சி வெள்ளம்’ படத்தின் முதல் தோற்றம் வெளியாகியுள்ளது. விஜய் சேதுபதி சாய் பல்லவி கூட்டணி ரசிகர்களிடம் எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

**கார்த்தியின் ‘சர்தார் 2’**

கார்த்தி, எஸ்.ஜே.சூர்யா நடிப்பில் உருவாகியுள்ள ‘சர்தார் 2’ செப்டம்பர் 10–ம் தேதி உலகம் முழுவதும் வெளியாகிறது. டிரெய்லரில் அதிரடி ஆக்‌ஷன் காட்சிகள் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

**‘என்ன விலை’ டிரெய்லர் வெளியீடு!**

நிமிஷா சஜயன், கருணாஸ் நடிக்கும் என்ன விலை திரைப்படம் ராமேஸ்வரத்தை பின்னணியாகக் கொண்ட மர்மக் கதையாக உருவாகியுள்ளது. படம் செப்டம்பர் 17–ம் தேதி வெளியாகிறது.

**சூர்யாஜோதிகா காதல் நினைவுகள் வைரல்!**

சில்லுனு ஒரு காதல் படத்தில் கணவன்மனைவியாக நடித்த சூர்யா, ஜோதிகா, அந்தப் பட வெளியீட்டுக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு நிஜ வாழ்க்கையிலும் திருமணம் செய்து கொண்ட சம்பவம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

# வங்கி ஊழியர்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தம்!




புதுடில்லி, செப். 09–

வாரத்திற்கு 5 நாட்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி செப்டம்பர் 11–ந்தேதி நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட வங்கி தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேலை மற்றும் செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகை திட்டத்தை மாற்றியமைத்தல் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி செப்டம்பர் 11–ந்தேதி நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட வங்கி தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் செப்டம்பர் 28 முதல் 30 வரை தொடர்ந்து மூன்று நாட்கள் வேலை நிறுத்தமும், அக்டோபர் 26 முதல் கால வரம்பற்ற வேலை நிறுத்தமும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பொதுத்துறை வங்கி அதிகாரிகளுக்கான ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை நிறுத்தி வைக்க அரசு முடிவு செய்துள்ளதாக, மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

# இ.கம்யூ. தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா மருத்துவமனையில் அனுமதி!



சென்னை, செப். 09–

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா, உடல் நல பரிசோதனைகளுக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக அக்கட்சிசார்பில்வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;–

“இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் டி.ராஜாவுக்கு உடல் சோர்வு ஏற்பட்டுள்ளது. அவர் முழு உடல் பரிசோதனைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் உடல் நலத்துடன் உள்ளார்.

கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், டி.ராஜா அவர்களின் மகளும் தேசியக் குழு உறுப்பினருமான அபராஜிதா, மாநிலக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, உள்ளிட்டோர் உடன் இருந்து உதவி வருகின்றனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் ஆகியோர் மருத்துவமனைக்கு வருகை தந்து தோழர் டி.ராஜாவிடம் உடல் நலம் விசாரித்து சென்றனர்.” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி விசைப்படகுடன் 9 மீனவர்கள் சிறைபிடிப்பு!



தூத்துக்குடி, செப். 09–

தூத்துக்குடி மாவட்டம், தருவை குளத்தைச் சேர்ந்த நட்டார்(எ) மிக்கேல்ராஜ் என்பவருக்குச் சொந்தமான செவுள் வலை விசைப்படகில், கடந்த செப்டம்பர் 4–ம் தேதி கேரள மாநிலம் கொச்சின் துறைமுகத்திலிருந்து 9 மீனவர்கள் லட்சத்தீவுகள் நோக்கி மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை சுமார் 3 மணியளவில் கவராத்தி தீவுப் பகுதியில் விசைப்படகு சென்று கொண்டிருந்த போது, பாதுகாப்பு காரணங்களுக்காக தடை செய்யப்பட்ட கடல் பகுதிக்குள் நுழைய முயன்றதாகக் கூறி கவராத்தி கடற்படையினர் அந்த விசைப்படகைக் கைப்பற்றிச் சிறைபிடித்தனர்.

படகு உரிமையாளர் நட்டார் என்ற மிக்கேல்ராஜ் உள்பட படகிலிருந்த 9 மீனவர்களும் கவராத்தி தீவில் கடற்படையினரின் விசாரணைக்காக விசைப்படகிலேயே சிறை வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தருவைகுளம் பகுதி கடலோர மக்களிடையே பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

# 625 விமானங்கள் ரத்து! பிரிட்டன் ஏர்போர்ட்டுகளில் பரபரப்பு!




பிரிட்டன், செப். 09–

பிரிட்டனின் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்பான NATS–ன் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஹீத்ரோ, கேட்விக், மான்செஸ்டர் உள்ளிட்ட முக்கிய விமான நிலையங்களில் விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இங்கிலாந்து முழுவதும் 625 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதில் ஈசிஜெட் நிறுவனத்தின் 218 விமானங்களும், பிரிட்டிஷ் ஏர்வேஸின் 132 விமானங்களும் அடங்கும். இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கான விமானங்களும் தாமதமடைந்ததால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

தொழில்நுட்பக் கோளாறு சரிசெய்யப்பட்டுவிட்டதாக NATS தெரிவித்தாலும், ஏற்பட்டுள்ள விமான அட்டவணை தேக்கம் காரணமாக முழுமையான இயல்பு நிலை திரும்ப தாமதமாகும் என கூறப்பட்டுள்ளது.

தொடர் தொழில்நுட்பக் கோளாறுகளுக்கு பொறுப்பேற்று NATS தலைமை நிர்வாகி பதவி விலக வேண்டும் என சில விமான நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன.

# “அம்பானி கேட்கும் கடன்! ₹12,500 கோடி திரட்டும் ரிலையன்ஸ்!”




புதுடெல்லி, செப். 09–

முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சுமார் 3 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் உள்நாட்டு கடன் பத்திரங்களை வெளியிடுகிறது. 5 ஆண்டு கால பத்திரங்கள் மூலம் ₹12,500 கோடி திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ₹10,000 கோடி அடிப்படை வெளியீடாகவும், கூடுதலாக ₹2,500 கோடி திரட்டும் Green–shoe Option வசதியும் உள்ளது. முதலீட்டாளர்களுக்கு ஆண்டுக்கு 7.47% வட்டி வழங்கப்பட உள்ளது.

2023 நவம்பருக்குப் பிறகு ரிலையன்ஸ் மேற்கொள்ளும் முதல் உள்நாட்டு கடன் பத்திர வெளியீடு இதுவாகும். நிறுவனத்தின் விரிவாக்கம் மற்றும் முதலீட்டு தேவைகளுக்காக இந்த நிதி திரட்டப்பட உள்ளது.

# அமெரிக்காவுக்கு கனடா கொடுத்த பதிலடி! 50% வரை புதிய வரி!




வாஷிங்டன், செப். 09–

அமெரிக்க அதிபர் டிரம்ப், கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சுமார் $20 பில்லியன் மதிப்பிலான பொருட்களுக்கு வரி விதித்ததைத் தொடர்ந்து, கனடாவும் பதிலடி கொடுத்துள்ளது. அமெரிக்கப் பொருட்களுக்கு 15%, 25% மற்றும் அதிகபட்சமாக 50% வரை இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 8 முதல் புதிய வரிகள் அமலுக்கு வந்ததால், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் போர் தீவிரமடைந்துள்ளது.

அமெரிக்காகனடா விநியோகச் சங்கிலிகள் வாகனங்கள், உலோகங்கள், எரிசக்தி உள்ளிட்ட பல துறைகளில் நெருக்கமாக இணைந்துள்ளதால், இந்த வர்த்தக மோதல் இரு நாடுகளின் தொழில் மற்றும் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.




## வங்கி வேலைக்கு தயாரா? SBI–யில் மாபெரும் ஆட்சேர்ப்பு!




இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான SBI, 2027 நிதியாண்டில் சுமார் 11,000 முதல் 12,000 கிளர்க் மற்றும் அதிகாரி பணியிடங்களை நிரப்ப திட்டமிட்டுள்ளது.

பணியாளர்களின் ஓய்வு எண்ணிக்கையைப் பொறுத்து இறுதி காலியிடங்கள் மாறக்கூடும். இதனுடன் நாடு முழுவதும் 200250 புதிய SBI கிளைகள் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய குடியிருப்பு மற்றும் வளர்ந்து வரும் நகரங்களை மையமாகக் கொண்டு கிளைகள் அமைக்கப்பட உள்ளன. மார்ச் 2026 நில வரப்படி SBI–யில் 2.45 லட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.




# வேலை வாய்ப்பு

## SECI–யில் 28 மத்திய அரசு வேலைகள்!

Solar Energy Corporation of India Limited (SECI) நிறுவனத்தில் Engineer, Senior Engineer, Officer, Accounts Officer, Deputy Manager, Deputy General Manager, General Manager உள்ளிட்ட பதவிகளுக்கு மொத்தம் 28 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிறுவனம்:
Solar Energy Corporation of India Limited (SECI)
அறிவிப்பு எண்: 03/2026
பணியிடங்கள்: 28
பணி வகை: மத்திய அரசு வேலை
பணி: Regular Basis
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்கம்: 25.08.2026 காலை 11.00 மணி
கடைசி நாள்: 23.09.2026 மாலை 5.00 மணி
விண்ணப்ப முறை: ஆன்லைன்– https://www.seci.co.in/

## Sahitya Akademi நிறுவனத்தில் 30 காலிப்பணியிடங்கள்!

நிறுவனம்: சாகித்ய அகாடமி
அறிவிப்பு எண்: SA/50/2/2026
மொத்த காலியிடங்கள்: 30
பணி வகை: மத்திய அரசு பணி
பணி நியமனம்: Regular Basis
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்கம்: 22.08.2026
கடசி தேதி: 21.09.2026
விண்ணப்ப முறை: நேரடி தபால் மூலம் (Offline)
அதிகாரப்பூர்வ இணையதளம்:
https://sahitya–akademi.gov.in
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
சாகித்ய அகாடமி
ரவீந்திர பவன்,
35, பெரோஷா சாலை,
புதுடெல்லி 110001.
கிடைக்கும் முக்கிய பதவிகள்:
Deputy Secretary, Assistant Editor, Senior Library & Information Assistant, Junior Translation Officer, Technical Assistant, Programme Assistant, Publication Assistant, Proof Reader, Stenographer Gr. II, Van Driver, Junior Clerk, Multi–Tasking Staff உள்ளிட்ட பணிகள்.

## UCO வங்கியில் 20 மத்திய அரசு வேலைகள்!

Bank வங்கியில் சிறப்பு அதிகாரி பணிகளுக்கு மொத்தம் 20 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வங்கி: UCO Bank
அறிவிப்பு எண்: HO/HRM/RECR/2026–27/COM–01
மொத்த காலியிடங்கள்: 20
பணி வகை: மத்திய அரசு பணி
பணி நியமனம்: Regular Basis
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்கம்: 29.08.2026
கடைசி தேதி: 18.09.2026
விண்ணப்ப முறை: ஆன்லைன்;https://www.uco.bank.in/

**பதவிகள்:**

Manager AI/ML Engineer MMGS–II (Specialist Cadre)
Manager Cyber Security MMGS–II (Specialist Cadre)

தகுதியானவர்கள் கடைசி தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

## என்.டி.பி.சி–செயில் மின் நிறுவனம் லிமிடெட் 17 காலிப்பணியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்:
NTPC–SAIL Power Company Limited
அறிவிப்பு எண்: 01/2026
பணி வகை: மத்திய அரசு வேலை
பணி நியமனம்: நிரந்தர பணி
மொத்த காலியிடங்கள்:
17 மூத்த உதவி பொறியாளர் பணியிடங்கள்
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்க தேதி: 07.09.2026 காலை 10.00 மணி
விண்ணப்பிக்க கடைசி தேதி: 22.09.2026 மாலை 06.00 மணி
விண்ணப்பிக்கும் முறை:
ஆன்லைன்– : https://www.nspcl.co.in/
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.nspcl.co.in/

## தேசிய வாழை ஆராய்ச்சிமையம், திருச்சி 20 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்:
தேசிய வாழை ஆராய்ச்சி மையம், திருச்சி
பணி வகை: பயிற்சிப் பணி (Apprentice Training)
பயிற்சி காலம்: 1 ஆண்டு
மொத்த காலியிடங்கள்: 20 பட்டதாரி பயிற்சியாளர் மற்றும் டிப்ளமோ தொழில்நுட்பப் பயிற்சியாளர் பணியிடங்கள்
பணியிடம்: திருச்சிராப்பள்ளி
விண்ணப்ப தொடக்க தேதி: 27.08.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 17.09.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://nrcb.org.in/

## இந்திய சூரிய ஆற்றல் கழகம் லிமிடெட் (SECI) 28 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்:
இந்திய சூரிய ஆற்றல் கழகம் லிமிடெட் (SECI)
அறிவிப்பு எண்: 03/2026
பணி வகை: மத்திய அரசு வேலை
பணி நியமனம்: நிரந்தர பணி
மொத்த காலியிடங்கள்: 28 பொறியாளர், மூத்த பொறியாளர், அதிகாரி, கணக்கு அதிகாரி, துணை மேலாளர், துணைப் பொது மேலாளர், பொது மேலாளர் பணியிடங்கள்
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்க தேதி: 25.08.2026 காலை 11.00 மணி
விண்ணப்பிக்க கடைசி தேதி: 23.09.2026 மாலை 05.00 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: SECI

## இன்றைய கார்ட்டூன்




## லண்டன் செல்லும் முதல்-அமைச்சர் விஜய், நடிகர் அஜித்தை சந்திக்கிறாரா?



சென்னை, செப். 09–

தமிழ்நாட்டுக்கான தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதல்–அமைச்சர் விஜய் வருகிற 10–ந்தேதி முதல் 16–ந்தேதி வரை லண்டனில் சுற்றுப்பயணம் செய்யவுள்ளார். இந்த பயணத்தின்போது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன் னணி நிறுவனங்களின் தொழில் அதிபர்கள் மற் றும் முதலீட்டாளர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளார்.

இந்த நிலையில், லண்டன் செல்லும் முதல்–அமைச்சர் விஜய், நடிகர் அஜித்குமார் பங்கேற்கும் கார் பந்தயத்தை நேரில் காண வாய்ப்பு இருப்ப தாக கூறப்படுகிறது. லண்டனில் வருகிற 11, 12–ந்தேதிகளில் மிச்செலின் லீ மென்ஸ் கார் பந்தயம் நடைபெற இருக்கிறது. இதில் அஜித்குமார் அணி பங்கேற்கிறது. இதனால் லண்டனில் தனது நண்பர் அஜித்குமாரை முதல்–அமைச்சர் விஜய் சந்திக்க வாய்ப்புள்ளதாகவும், கார் பந்தயத்தை நேரில் பார்க்க வாய்ப்பிருப்பதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது.

சினிமாவில் பரம போட்டியாளர்களாக கருதப்பட்டாலும் விஜய் – அஜித் இடையே நல்ல நட்புறவு நிலவுகிறது. முதல்–அமைச்சர் விஜய்க்கு பல சந் தர்ப்பங்களில் அஜித்குமார் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டிருக் கிறார். சமீபத்தில் கூட சட்டமன்றத்தில் 110 விதியின்கீழ் தமிழகத்தில் மோட் டார் ஸ்போர்ட்ஸ் நகரம் அமைக்கப்படும் என்ற விஜய்யின் அறிவிப்புக்கு. அஜித்குமார் நன்றியும், வாழ்த்தும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## 2030-க்குள் மனித குலம் அழியும்: ஆந்த்ரோபிக் ஆய்வாளர் ராஜினாமா செய்து வெளியிட்ட திடுக்கிடும் தகவல்!




செயற்கை நுண்ணறிவுத் துறையில் முன்னணி நிறுவனங்களான ஆந்த்ரோபிக் மற்றும் ஓபன்ஏஐ ஆகிய இரண்டிலும் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றிய 27 வயதான முன்னணி ஆய்வாளர் ஜேக்கப் காக்சன், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள விரிவான பதிவில், செயற்கை நுண்ண றிவு நிறுவனங்கள் மனித உயிர்களுடன் பேராபத்தான சூதாட்டத்தில் ஈடுபட்டு வருவதாகக் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு நிறுவனங்கள் அனைத்தும் பொறுப்பற்ற முறையில், தங்களை தாங்களே மேம்படுத்திக் கொள்ளும் 'சூப்பர் இன்டலிஜென்ஸ்' அமைப்புகளை உருவாக்கும் போட்டியில் தீவிரமாக இயங்கி வருகின்றன. இந்த தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியை யாரும் குறைவாக மதிப்பிடக் கூடாது. மிக விரைவிலேயே மனித ஆற்றலை மிஞ்சும் வகையில் உருவாகும் இந்த அமைப்புகள், எதையும் ஹேக் செய்யவும், ஒரே இரவில் எந்தவொரு துறையிலும் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தவும், நிஜ உலக வளங்களைக் கைப்பற்றக்கூடிய ஆற்ற லையும் பெறும் திறன் கொண்டவை.

செயற்கை நுண்ணறிவுத் துறையில் இருக்கும் முக்கியத் தலைவர்களும் மூத்த ஆய்வாளர்களும், இந்த தொழில்நுட்பம் இந்த தசாப்தத்தின் இறுதிக்குள் மனித சமூகத்தையே அழித்துவிடும் என்று தனிப்பட்ட முறையில் நம்புகின்றனர். ஓபன்ஏஐ நிறுவனத்தில் இதன் நாகரிக ஆபத்துகள் குறித்து இன்னும் முழுமையான விழிப்புணர்வு ஏற்படவில்லை.

அதேசமயம், ஆந்த்ரோபிக் நிறுவனத்தில் இதன் அபாயங்கள் தெரிந்திருந்தாலும், போட்டியில் தாங்கள் பின் தங்கிவிடக் கூடாது என்ற பயம் காரணமாகவே அவர்கள் தொடர்ந்து இதில் ஆபத்தான வேகத்தில் இயங்கி வருகின்றனர். முன்னதாக ஆந்த்ரோபிக் நிறுவனத்தைக் கடுமையாக விமர்சித்து வந்த தொழிலதிபர் எலான் மாஸ்க், அந்நிறுவனமே தற்போது செயற்கை நுண்ணறிவுத் துறையில் முன்னணியில் இருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

காக்சனின் இந்த வெளிப்படையான குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த ஆந்த்ரோபிக் நிறுவனத்தின் அலைன்மென்ட் சயின்ஸ் பிரிவின் தலைவர் ஈவான் ஹூபிங்கர், காக்சன் கூறிய கருத்து உண்மையானதுதான் என்று உறுதிப்படுத்தியுள்ளார். அடுத்த பத்து ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவால் மனித குலத்திற்கு ஆபத்து ஏற்பட 10 சதவீதத்திற்கும் அதிகமான வாய்ப்புகள் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், சூப்பர் இன்டலிஜென்ஸ் தொழில்நுட்பத்தைக் கட்டுப்படுத்து வதற்கான சரியான பாதுகாப்புத் திட்டங்கள் இன்னும் முழுமையாக உருவாக்கப்படவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

## ஜேசன் சஞ்சய் பேச தொடங்கியதும்... அரங்கமே அதிர்ந்தது!




சேலம், செப். 09–

சேலத்தில் நடைபெற்ற 'சிக்மா' திரைப்பட நிகழ்ச்சியில் இயக்குநர் ஜேசன் சஞ்சய் பேசத் தொடங்கியதும், ரசிகர்கள் உற்சாகமாக "TVK... TVK..." என முழக்கமிட்டதால் அரங்கமே அதிர்ந்தது. ரசிகர்களின் முழக்கத்துக்கு ஜேசன் சஞ்சய் கட்டை விரலை உயர்த்தி தனது வரவேற்பை வெளிப்படுத்தினார். விஜய்யின் மகனான ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகும் 'சிக்மா' படத்தில் சந்தீப் கிஷன், ஃபரியா அப்துல்லா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். லைகா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு தமன் இசையமை த்துள்ளார். பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இப்படம் அக்டோபர் 2–ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

## நாகை-இலங்கை கப்பல் போக்குவரத்து 11-ந்தேதி வரை ரத்து!




நாகை, செப். 09–

நாகை – இலங்கை காங்கேசன்துறை இடையே வாரத்தில் செவ்வாய்க்கிழமை தவிர மற்ற நாட்களில் கப்பல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் கப்பல் போக்குவரத்து தொடர்பான பாதுகாப்பு, ஆய்வு சான்றிதழ்கள் மற்றும் விதிமுறை குறித்து ஆய்வு செய்யும் வணிக கடல்சார் துறை அதிகாரிகள் சென்னையில் இருந்து நாகை வந்து நாகை –இலங்கை இடையே இயக்கப்படும் கப்பல்களை ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வில் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டதாகவும், இந்த குறைபாடுகளை சரிசெய்யும் வரை கப்பல் சேவையை ரத்து செய்ய சென்னை வணிக கடல் சார்துறை சார்பில் கடிதம் வழங்கப்பட்டதாகவும் தெரிகிறது. இதனையடுத்து கப்பல்களில் சீரமைப்பு பணிகள் நடந்து வருகிறது.

இந்த பணிகள் நிறைவு பெற்றவுடன் 11–ந்தேதிக்கு பின்னர் பயணிகள் சேவை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை நாகை–இலங்கை காங்கேசன் துறை இடையே திட்டமிடப்பட்ட பயணங்கள் அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது.

## 'வெளிநாட்டு குடியுரிமை பெற்றவர் இந்திய ஓட்டுரிமையை கோர முடியாது' - மதுரை ஐகோர்ட்டு கிளை!



மதுரை, செப். 09–

நெல்லையை சேர்ந்த ஜெய ஆனந்தன் என்பவர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "நெல்லை மாவட்டம் கூடங்குளம் பகுதியை சேர்ந்த நான் இலங்கைக்கு சென்று அந்நாட்டு குடியுரிமை பெற்று கொழும்பு நகரில் குடும்பத்துடன் வசித்து வந்தேன். கடந்த ஏப்ரல் மாதம் என் தாயாரின் மருத்துவ சிகிச்சைக்காக தமிழகம் வந்தபோது, எனது பெயர் இந்திய வாக்காளர் பட்டியலில் தொடர்ந்து இருப்பதை அறிந்து, தமிழக சட்டசபை தேர்தலில் வாக்களித்தேன்.

இதையடுத்து எனக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், இலங்கைக்கு திரும்பி செல்ல அனுமதித்து உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி விக்டோரியா கவுரி அமர்வில் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, "வெளிநாட்டு குடியுரிமை பெற்ற ஒருவர், வாக்காளர் பட்டியலில் பெயர் தொடர்ந்து இடம்பெற்றிருப்பதை மட்டும் காரணமாக கொண்டு இந்திய குடி மக்களுக்கு உரிய ஓட்டுரிமையை கோர முடியாது. எனவே, மனுதாரர் சம்பந்தப்பட்ட கோர்ட்டை அணுகி, தனது இலங்கை பயணம் தொடர்பான முழு விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். விசாரணைக்கு தேவைப்படும் பட்சத்தில் எப்போது அழைத்தாலும் நேரில் ஆஜராக உறுதி அளிக்கும் உத்தரவாத பத்திரத்தை தாக்கல் செய்து, இலங்கை செல்ல அனுமதி கோரி முறையாக விண்ணப்பிக்கலாம்.

இலங்கை குடியுரிமை பெற்றவர் தமிழக சட்டமன்ற தேர்தலில் வாக்களித்து விட்டு மீண்டும் இலங்கை செல்ல அனுமதி கோருகிறார். ஒருவர் வெளிநாடு செல்வது என்பது தனி நபர் சுதந்திரம் ஆகும். இருப்பினும் அந்த சுதந்திரம் என்பது முழுமையானதல்ல.

குற்றவியல் வழக்கை எதிர்கொள்ளும் நபர் சட்டத்திற்கு உட்பட்டுதான் வெளிநாடு செல்ல முடியும். எனவே, மனுதாரர் முறைப்படி சட்ட அனுமதி பெற்றுதான் வெளிநாடு செல்ல முடியும்" என்று உத்தரவிட்டு, இந்த மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

## ராஜஸ்தான் உள்ளாட்சித் தேர்தலின் முதல்கட்ட வாக்குப்பதிவு தொடக்கம்!



ஜெய்ப்பூர், செப். 09–

ராஜஸ்தான் மாநிலம் முழுவதும் உள்ள 162 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு களுக்கான முதல்கட்டத் தேர்தல் வாக்குப்பதிவு புதன்கிழமை காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. இதில் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் உள்ள 18 உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாக்குப் பதிவு நடைபெற்று வருகிறது. முதல்கட்ட தேர்தலில் 57.52 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வாக்காளர்கள் வாக்களி ப்பதற்கு வசதியாக 7,683 வாக்குச் சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்குப் பதிவு நடைபெறும் இந்த 162 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஆல்வார், பரத்பூர், பிகானேர் மற்றும் பில்வாரா ஆகிய 4 மாநகராட்சிகள், 27 நகராட்சி மன்றங்கள் மற்றும் 131 நகராட்சிகள் அடங்கும்.

முதல்கட்ட வாக்குப் பதிவில் 5,393 கவுன்சிலர் பதவிகளுக்கு 20,000–க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். ஜெய்ப்பூர் நகராட்சி உள்பட மீதமுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு செப் 11 ஆம் தேதி நடைபெறுகிறது.

இரண்டு கட்ட வாக்குப்பதிவுகளிலும் பதிவான வாக்குகள் அனைத்தும் செப்.14 ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளன.



திருச்செந்தூர் முருகன் கோவில் ஆவணி திருவிழா தேரோட்டத்தின்போது தேரில் எழுந்தருளிய குமரவிடங்க பெருமான், வள்ளி–தெய்வானை அம்பாள் தேரை பக்தர்கள் ஆயிரக்கணக்கானோர் வடம் பிடித்து இழுத்தனர்.

## தூய்மையான காற்று கொண்ட நகரங்கள் பட்டியல்; தமிழகத்தில் சிறந்தது திருச்சி!



புதுடில்லி, செப். 09–

தூய்மையான காற்று கொண்ட நகரங்களின் பட்டியலில் தமிழகத்தில் உள்ள திருச்சி சிறந்த தரநிலையைப் பெற்றுள்ளது. தலைநகரான சென்னை க்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் செப்டம்பர் 7ம் தேதி தூய்மையான காற்று தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. தூய்மையான காற்றை நிலைக்கச் செய்து, பொதுமக்கள் ஆரோக்கியமான வாழ வழிவகை செய்யும் விதமாக, தூய்மையான நகரங்களின் பட்டியலை மத்திய அரசு வெளியிட்டு, அதற்கு விருதும் வழங்கி வருகிறது.

அந்த வகையில், இந்தாண்டுக்கான பட்டியல் வெளியாகியுள்ளது. அதில், 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட நகரங்களின் பட்டியலில் மத்திய பிரதேசத்தின் இந்தூரை (197) விட வெறும் ஒரு புள்ளிகள் முன்னிலையில் உத்தரபிரதேசத்தின் லக்னோ (198) முதலிடம் பிடித்துள்ளது. ஜபல்பூர் (195) 3வது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தப் பெருநகரப் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த 3 நகரங்கள் மட்டுமே இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளது. சிறப்பாக செயல்பட்டு வரும் திருச்சி (183) 12வது இடத்தை பிடித்துள்ளது. அடுத்ததாக தமிழக தலைநகரான சென்னை 35வது இடத்திலும், மதுரை 39வது இடத்திலும் உள்ளன. காற்று மாசுபாட்டில் அதிகம் பாதித்துள்ள டில்லியே 21வது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல, முக்கிய நகரங்களான ஹைதராபாத் 19வது இடத்திலும், மும்பை 28வது இடத்திலும், பெங்களூரு 32வது இடத்திலும், கோல்கட்டா 38வது இடத்திலும் உள்ளன.

அதேபோல, மிகக் குறைந்த அளவிலான மக்கள் தொகை (3 லட்சத்திற்கும் குறைவான) கொண்ட நகரங்கள் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த தூத்துக்குடி மட்டும் 35வது இடம் பிடித்துள்ளது. ஒடிசாவின் ரூகெலா முதலிடம் பிடித்துள்ளது. உத்தரபிரதேசத்தின் பைரஷோபாத் 2வது இடத்தையும், ஆந்திராவின் குண்டூர், அமராவதி நகரங்கள் முறையே 3 மற்றும் 4வது இடங்களை பிடித்துள்ளன.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020